(ஈ) தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதா* (சட்டப்பேரவை மசோதா எண் 19/70)

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : பேரவைத் தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதா * (சட்டப்பேரவை மசோதா எண். 19/70) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழி கின்றேன்.

செங்கோட்டை வட்டத்தில் இயங்கி வந்த செங்கோட்டை மின் வழங்கு நிறுவனம், மாநிலங்கள் சீரமைப்பு செய்யப்பட்டதன் விளைவாக 1—11—1956-ஆம் நாள் அன்று இம்மாநிலத்துக்கு மாற்றப்பட்டது. 1950-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்—கொச்சி மின் சக்தி தீர்வைச் சட்டத்தின் 3 (1) பிரிவின் கீழ் முன்னுள் திருவிதாங்கூர்—கொச்சி மாநிலத்திலுள்ள ஒவ்வொரு உரிமை தாரரும் வரையறுக்கப்பட்ட முறையில் ஒவ்வொரு மாதமும், ஒரு யூனிட்டுக்கு இரண்டணாவிற்கு மேற்பட்ட விலையில் முந்திய திங்களில் செய்யப்பட்ட மின்சக்தி விற்பனைகள் அனைத்தின் மீதும் யூனிட்டுக்கு 9 காசு வீதம் கணக்கிடப்பட்ட ஒரு தீர்வையை அரசுக்குச் செலுத்த வேண்டும். செங்கோட்டை மின்சக்தி வழங்கு நிறுவனம், அது நிறுவப்பட்ட நாள் முதற்கொண்டு 1959-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்—கொச்சி அரசுக்குத் தீர்வை செலுத்தவில்லை. தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மின்சக்தித் தீர்வைச் சட்டம் (தமிழ் நாடு சட்டம் 5/1939) 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ஆம் நாள் முதற்கொண்டு, தமிழ்நாடு 1960-ஆம் ஆண்டு (மாற்றப்பட்ட பகுதி) சட்டங்கள் நீட்டிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1960) 3-வது பிரிவின் கீழ் மாற்றப்பட்ட பகுதிகளுக்கு நீட்டிக்கப் பட்டது. எனவே, 1—11—1956-ல் தொடங்கி 31—3—1961 அன்று முடிவடையும் கால அளவில் செங்கோட்டை மின்சக்தி வழங்கல் நிறுவனம் செலுத்த வேண்டிய மின் சக்தித் தீர்வையை வசூலிப்பது குறித்து இந்த அரசு அக்கறை கொண்டுள்ளது. 1—4—1961 முதல் 30—11—1966 வரையுள்ள கால அளவுக்காக இந்த நிறுவனம் செலுத்தத்தக்க மின் சக்தித் தீர்வை தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மின் சக்தித் தீர்வைச் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட்டது. 1—12—1966 முதற்கொண்டு தொடங்கிய கால அளவுக்கான நிலுவைகளை வசூலிப்பதற்காக வருவாய் வசூல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1—11—1956 முதல் 31—3—1961 காகச் செங்கோட்டை மின்சக்தி வழங்கு நிறுவனத்தினிடமிருந்து இந்த அரசுக்குச் சேரவேண்டிய மின்சக்தித் தீர்வை வசூலிப்பதற்காக 1956-ஆம் ஆண்டு மாநிலங்கள் சீரமைப்புச் சட்டத்தின் கீழ் கண்டுள்ள விதித்துறைகளைப் பயன்படுத்த இயலாது.

1—11—1956 முதல் 31—3—1961 வரையுள்ள கால அளவிற் காகச் செங்கோட்டை மின் சக்தி வழங்கு நிறுவனத்திடமிருந்து தீர்வை நிலுவைகளை வசூலிக்க நடவடிக்கைகளை எடுத்தபோது, மேற்படி நிறுவனம் 1950-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்—கொச்சி மின் சக்தித் தீர்வைச் சட்டத்தின் 3, 9 (2) பிரிவுகளில் கண்டுள்ள விதித் துறைகளின் செல்திறனை ஆட்சேபித்து ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்தது. தீர்வை நிலுவைகளை நிலவரி நிலுவைகளைப்போன்று

* 26—8—1970 தேதிய சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

வசூலிப்பதைத் தடைசெய்து உயர்நீதிமன்றம் தடையாணை ஒன்றைப் பிறப்பித்தது. 1950-ஆம் ஆண்டு திருவாங்கூர்—கொச்சி மின் சக்தித் தீர்வைச் சட்டத்தின் 3-வது பிரிவைச் சேர்ந்த (1), (2) உட்பிரிவுகளும், 9-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (a), (b) பகுதிகளும் தீர்வை வீதங்களினளவையும், தீர்வை வீதங்களிலிருந்து விலக்களிக்கும் வரம்பையும் கொள்கை வரையறை அல்லது கோட்பாடு எதையும் குறிப்பிடாமல் முடிவுசெய்யும் அதிகாரத்தை மாநில அரசுக்கு அளித்துள்ள வரையில், வரம்புமீறிய சட்டமியற்றும் அதிகாரம் அரசுக்குக் கொடுக்கப்பட்டுள்ளதென்றும், எனவே, அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு அவை முரணானவை என்றும் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. மனுதார் தொகை செலுத்த வேண்டுமெனக் கேட்டிருப்பது அதிகாரமின்றியும், சட்ட விரோதமான முறையிலும் செய்யப்பட்டிருப்பதாகுமென்று உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. கேரள அரசும் அந்த அரசுக்குச் சேரவேண்டிய தீர்வை நிலுவைகளை வசூல் செய்வதில் இதே போன்ற இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டியிருந்தது. தொடர்பான இந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்காக, 1965-ஆம் ஆண்டு கேரள மின்சக்தித் தீர்வை (செல்திறன்) சட்டம் இயற்றப்பட்டது. 1950-ஆம் ஆண்டு திருவிதாங்கூர்—கொச்சி மின்சக்தித் தீர்வைச் சட்டத்தின் கீழ் மின்சக்தி விற்பனையின் மீது தீர்வை விதித்து வசூலிப்பதைச் செல்திறனுக்கவே அச்சட்டம் இயற்றப்பட்டது.

தற்போதைய நேர்வில் 1950-ஆம் ஆண்டு திருவாங்கூர்—கொச்சி மின்சக்தித் தீர்வைச் சட்டத்தின் கீழ் தீர்வை முன்னரே விதிக்கப்பட்டது. 1962-ஆம் ஆண்டு 639-ஆம் எண் ரிட் மனுவில் சென்னை உயர்நீதி மன்றம் அளித்த திர்ப்பைக் கருதி அரசு இதில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையெல்லாம், வரி விதிப்பைச் செல்திறனுக்குவதும், விதிக்கப்பட்ட வரியை வசூலிக்க அதிகாரமளிப்பதுந்தான். எனவே, 1956 நவம்பர் 1-ஆம் நாள் தொடங்கி 1961 மார்ச் 31-ஆம் நாள் அன்று முடிவடையும் கால அளவில், மேற்படி சட்டத்தின் கீழும் அதன் கீழ்ச்செய்யப்பட்ட விதிகளின் கீழும், தீர்வை விதிப்பதையும் வசூல் செய்வதையும், செல்திறனுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளுமாறு இப்பேரவையை நான் வேண்டுகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, மசோதா பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3, 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, "தமிழ்நாடு 1970-ம் ஆண்டு மின்சக்தித் தீர்வை (செல்திறன் ஆக்குதல்) மசோதா (சட்டப் பேரவை மசோதா எண் 19/70) நிறைவேற்றப்படவேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, மசோதா சட்டமாக நிறைவேற்றப்பட்டது.